# மெய்தத்துவ நெறிகள்




அஃக்சி – தவத்திரு. எழிலன் லெபேல்

# மெய்தத்துவ நெறிகள்

ஆசிரியர் :

**அ:.க்சி - தவத்திரு. எழிலன் லெபேல்**

**அஃக்சி சித்தர் யோகம் மெய்தத்துவ**
**ஆய்வு அறக்கட்டளை**
(யோகம், சித்தம், கமுக்கம்)
21, குண்டு சாலை, உழவர்கரை, புதுவை–605 010.
தொலைபேசி [redacted]

பதிப்பகம் :

**திருமூலர் பதிப்பகம்**
21, குண்டு சாலை, உழவர்கரை,
புதுவை–605 010.
தொலைபேசி : 2292385

## நூலாக்கம்

நூற்பெயர் : மெய்தத்துவ நெறிகள்

பொருள் : தன் ஆய்வு

ஆசிரியர் : **அஃக்சி-தவத்திரு. எழிலன் லெபேல்**

பதிப்பு : முதற்பதிப்பு 2003

உரிமை : ஆசிரியர்க்கே

வெளியீடு : அஃக்சி சித்தர் யோகம் மெய்தத்துவ ஆய்வு அறக்கட்டளை

விலை : [redacted] **இலவசம்**

கணினி & அச்சிட்டோர் : ஆதவன் மறுதோன்றி அச்சகம்,
418, வழுதாவூர் சாலை,
முத்தரையர்பாளையம், புதுவை–9.
தொலைபேசி : 2278738

பதிப்பகம் : திருமூலர் பதிப்பகம்,
21, குண்டு சாலை,
உழவர்கரை, புதுவை–10.
தொலைபேசி : 2292385




## காணிக்கை

*பிரான் அருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்*
*பிரான் அருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்*
*பிரான் அருளிற் பெருந்தன்மையும் உண்டு*
*பிரான் அருளிற் பெருந் தெய்வமும் ஆமே.*

*- திருமூலர்.*

திருமூலர் அருளிய திருமந்திர வாழ்க்கை மறைபொருளுக்கேற்ப அற ஒழுக்கத்தின் மேன்மையும் அறிவு நெறியின் வழிகாட்டலும் அன்பின் நெகிழ்வும் பேரறிவு தன்மையை பெறுவுதும் மனித வாழ்வின் பிறவிப் பயன் ஆகும்.

என்னுள் ஆழ்ந்து ஆராய்ந்த தத்துவங்களை மனித குலம் நலம்பெற "**மெய்தத்துவ நெறிகள்**" நூலினை காணிக்கையாக்குகின்றேன்.

**அஃக்சி – தவத்திரு. எழிலன் லெபேல்**

# கடவுள்

1. வான்பொருள் மறையின் பேரொலி ஆனவர். ஆதி அந்தம் இல்லாத சகல சித்து உரு தன்மை உடையவர் இறைவன்.

2. கடவுள் ஒருவரால் படைக்கப்படுகின்றோம். மதம், இனம், மொழி மூலமாக பிரிக்கப்படுகின்றோம். ஆனால் கடவுள் முடிவால் தான் இயங்குகின்றோம் என்பதை இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உணர்கின்றனர்.

3. கடவுளை காண விரும்புகின்றவர்கள் முதலில் தன்னை அறிந்து கொள்ள வேண்டும். தன் ஆன்மா தூய்மையின் மூலம் கடவுளை காண முடியும்.

4. கடவுள் சக்தியை உணர்வதற்கு மனித சக்தி தேவை. மனித சக்தியை உணர்கின்ற பொழுது கடவுள் சக்தி ஆதி அந்தம் அற்ற நிலையாய் தோன்றும்.

5. கடவுளை உணர்ந்த மனிதர் மனிதநேயத்தோடு வாழுகின்றனர். கடவுள் ஒருவரே என்பதை அனைத்து உயிர்களுக்கும் உணர செய்கின்றனர்.

6. கடவுளை நம்புகின்றவன் தன்னை உணர்வான் தன்னை உணர்கின்றவன் கடவுளை தன்னுள் காண்பான்.



# காணிக்கை

*பிரான் அருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்*
*பிரான் அருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்*
*பிரான் அருளிற் பெருந்தன்மையும் உண்டு*
*பிரான் அருளிற் பெருந் தெய்வமும் ஆமே.*

*- திருமூலர்.*

திருமூலர் அருளிய திருமந்திர வாழ்க்கை மறைபொருளுக்கேற்ப அற ஒழுக்கத்தின் மேன்மையும் அறிவு நெறியின் வழிகாட்டலும் அன்பின் நெகிழ்வும் பேரறிவு தன்மையை பெறுவதும் மனித வாழ்வின் பிறவிப் பயன் ஆகும்.

என்னுள் ஆழ்ந்து ஆராய்ந்த தத்துவங்களை மனித குலம் நலம்பெற **"மெய்தத்துவ நெறிகள்"** நூலினை காணிக்கையாக்குகின்றேன்.

**அஃக்சி – தவத்திரு. எழிலன் லெபேல்**

# கடவுள்

1. வான்பொருள் மறையின் பேரொலி ஆனவர். ஆதி அந்தம் இல்லாத சகல சித்து உரு தன்மை உடையவர் இறைவன்.

2. கடவுள் ஒருவரால் படைக்கப்படுகின்றோம். மதம், இனம், மொழி மூலமாக பிரிக்கப்படுகின்றோம். ஆனால் கடவுள் முடிவால் தான் இயங்குகின்றோம் என்பதை இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உணர்கின்றனர்.

3. கடவுளை காண விரும்புகின்றவர்கள் முதலில் தன்னை அறிந்து கொள்ள வேண்டும். தன் ஆன்மா தூய்மையின் மூலம் கடவுளை காண முடியும்.

4. கடவுள் சக்தியை உணர்வதற்கு மனித சக்தி தேவை. மனித சக்தியை உணர்கின்ற பொழுது கடவுள் சக்தி ஆதி அந்தம் அற்ற நிலையாய் தோன்றும்.

5. கடவுளை உணர்ந்த மனிதர் மனிதநேயத்தோடு வாழுகின்றனர். கடவுள் ஒருவரே என்பதை அனைத்து உயிர்களுக்கும் உணர செய்கின்றனர்.

6. கடவுளை நம்புகின்றவன் தன்னை உணர்வான் தன்னை உணர்கின்றவன் கடவுளை தன்னுள் காண்பான்.



7. கடவுளை உணராத மனிதன் மனிதநேயத்தை பிரித்து மதங்களை உருவாக்குகின்றான்.

8. கடவுள் பெயராலும் மதத்தின் பெயராலும் மனிதனை பிரித்து பார்கின்றவன் மூடன்.

9. கடவுளை கண்டவர் உலக உயிர்கள் அனைத்திற்கும் பொது உடைமையாய் விளங்குவர்.

10. சுயநல பற்று நீங்கி இறைவழிப்பாட்டில் ஈடுபடுங்கள் வழிபாடு இனிதாகி இறையருள் கிட்டும்.

11. பஞ்ச பூதம், ஒன்பது கோள்கள், இருபத்து ஏழு நட்சத்திரங்கள் மற்றும் பேரண்டத்தின் இயக்கம் இவை மனித வாழ்வின் தொடக்கமாகும்.

12. ஒரு உயிர் கருவுற்ற நேரம், ஒரு உயிர் உடம்பு பிறந்த நேரம் அந்த குழந்தையின் ஊழ் ஆக அமைகின்றது.

13. உயிரின் தத்துவம் சூரியனாகவும், உடம்பின் தத்துவம் சந்திரனாகவும் அறிவின் தத்துவம் பிராணனாகவும் ஆன்மாவின் தத்துவம் இறை பொருளாகவும் விளங்குகின்றது.

14. சூரியன் எழுமின் எழுந்து சூழ்முனையில் ஆயிரம் சூரியன் சுடர் தரிசனம் தினம் கண்டால் மரணம் இல்லா பெருவாழ்வு அடையலாம்.

15. வியாழன், சனி வலத்தில் சுவாசம் நடந்தால் இந்த உடம்பு அழியாது.

16. அண்டத்துள் மறைந்த சிவகந்த மலர்களை நாசி வழியாக அறிவில் சூடி பேரறிவு தன்மையை அடைய இயலும்.

17. வான் பொருள் தரும் சக்தி எல்லாம் ஊழ் பொருளுள் உறுதியாக்கப்பட்டால் மெய்பொருள் காண்பது உறுதி.

18. அண்டத்தில் ஒருங்கிய வேதாந்த கருவையும் பிண்டத்தில் புகுந்த பிரணவத்தையும் கண்டத்தில் வைத்து கருத்துடன் நின்றால் சித்தத்தில் தெளிவு பெறலாம்.

19. உணர்வின் தூய்மை உடலின் தூய்மை உடல் உருப்புகளின் தூய்மை, நாடி நரம்புகளின் தூய்மை இவைகளின் இயக்கத்தை வைத்தே புலனடக்கம் ஏற்படும்.

20. வேதம் என்பது தன்னையும் உலக உயிர்களையும் அண்டத்தின் சீற்றத்தையும் தன்னுள் அறிந்து ஆராய்ந்து உணர்ந்த முழு வெளிபாடு ஆகும்.



21. உன் மனம் ஏற்பதை உணர்வு விரும்புகின்றது அறிவு விரும்புவதை ஆன்மா ஆக்கம் செய்கின்றது. ஆன்மாவின் ஆக்கம் பரம்பொருள் ஆகின்றது. இதுவே வேதாந்தம்.

22. பஞ்சபூத சக்தியையும் உனது சக்தியையும் பிரித்து பார்க்க வேண்டாம். அவை இரண்டும் ஒன்றே. பகுத்தறிவு ஆய்வின் முடிவு நிலை இதுவே.

23. ஐந்தின் பெருமையை அறியாதவனும் எட்டுக்குள் அடங்காதவனும் உயிர் எழுத்தை உணராதவனும் ஆயுத எழுத்தை ஆராய்ந்து பாராதவனும் மனிதனாக வாழ இயலாது.

24. மூலபொருளை நாசி நுணியில் நோக்கினால் பஞ்ச பூதம் தன்னுள் பரம்பொருளாக தோன்றும்.

25. உனது சுவாச நிலையே உன் வாழ்க்கையாக அமைக்கப்படுகின்றது. ஆகவே சுவாச உணர்வை ஒருமுகபடுத்தி லட்சியத்தில் உறுதியாக இரு.

26. யோகிகள், முனிவர்கள், ரிஷிகள் இவர்கள் ஆசையை மறுத்தவர்கள் அல்ல ஆசையின் எண்ணங்களை ஆய்வித்தவர்கள்.

27. உணவு, உறக்கம் மனிதனுக்கு தேவை. ஆனால் யோகியானவன் உணவு, உறக்கம் பற்றி சிந்திக்கலாகாது.

28. மௌனம் என்ற மந்திரத்தை கற்றவன் மெய்தத்துவ அறிவை கண்ட ஞானி ஆவர்.

29. தவவலிமையால் அனைத்து உயிர்களும் அன்பாக வாழ வழி செய்ய முடியும். உலக அமைதிக்கும் வழி வகுக்கும். தவத்தில் சிறந்தவன் நல்ல மனிதனாவான்.

30. யோகத்தின் வல்லமையை மனிதன் மூன்று நிலைகளில் உணருகின்றான். தெய்வத்தின் சக்தி என்றும் இயற்கையின் சக்தி என்றும் மனிதனின் சக்தி என்றும் கண்டவன் யோகத்தை பூரணமாக உணர்ந்து மனித நேயத்தை முழுமையாக்கி கொள்கின்றான்.

31. மௌனத்தில் தன்னை ஆழ்ந்து நோக்க வேண்டும். துன்பத்தில் தன்னை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதன் அமைதியில் சிந்தனை தெளிவடைந்து சித்தம் பூரணமாகும்.

32. ஒன்றை பற்றும் வரை மனம் அலைகின்றது. அந்த ஒன்றை பற்றிய பின் மனம் அடங்கி விடுகின்றது. அந்த ஒன்று எதுவென்று தன்னுள் உணர்ந்த பின் உனது வாழ்க்கையில் உறுதியாய் இரு.



33. வாழ்வின் தத்துவத்தை வாழ்நாளில் அறிந்து உணர்ந்து தெளிவது தவம்.

34. உயிரை இறைவனாக கொண்டு உடலை இறை வடிவமாக வணங்கி ஆதி செந்தமிழில் தெளிந்து வழிபட்டால் ஓங்கார ஓசை தன்னுள் எழுந்து சிவமயம் தோன்றும்.

35. உணர்வது அறிவது ஆராய்வது தெளிவது பேரறிவின் மெய்பொருளாக விளங்குவது மனித தன்மையாகும்.

36. உடல் என்னும் மெய்தத்துவத்தை அறிந்து உணர்ந்தால் உலகம் உனக்கு வசப்படும்.

37. இந்த உடல் எப்பொழுது வேண்டுமானாலும் மரணத்தை தழுவலாம் இருந்தாலும் இந்த உடலை மிக தூய்மையாக வைத்துக்கொள். உன் அறிவின் வளர்ச்சிக்கு இவ்வுடல் அனுபவங்களை தரும்.

38. தவத்தின் சுகத்தை தன் உயிர்–உடம்புக்குள் தேடுபவன் பிறப்பின் பயன் அடைந்து இனி பிறவாமை நிலை அடைகின்றான்.

39. தெய்வத்தன்மை என்பதும் மனிதத்தன்மை என்பதும் தன்னுள் இருந்து தன்னை இயக்கும் சக்தியாகும்.

40. ஒரு மனிதன் தன்னை ஆழ்ந்து உணருகின்ற பொழுது தன்னுள் இருக்கும் சக்தியின் வெளிபாடு பரம்பொருளை சரணடையும்.

41. ஆன்மா தூய்மை அடைந்து மெய்யறிவு செழித்து நின்றால் மெய் பேரறிவு இறைவன் என்று போற்றப்படும்.

42. வாழ்வின் நிலையை மனிதன் கலையாக சிந்தித்தான் அவற்றிற்கு வடிவம் கொடுத்து மகிழ்ந்தான் தன்னையும் உணர்ந்த அக்கலையை தவக்கலை என்று வணங்க தொடங்கினான்.

43. தவம் என்பதை மனிதன் மதத்துடன் இணைத்து பேச வேண்டாம் மாறாக மனித நேயத்தோடு இணைத்து பார்த்தால் மதம் தோன்றிய விதம் அறிவார்கள்.

44. தவ இருக்கை தத்துவத்தை உலகுக்கு சொல்லுங்கள் மக்கள் சிந்திக்க தொடங்கட்டும். காமத்தையும் மோகத்தையும் ஆய்வித்து முக்தியடையுங்கள் இதில் மனித நேயம் சிறக்கட்டும்.

45. கடவுள் நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் உன்னிடம் இருந்தால் பிரபஞ்சத்தை உனக்குள் சாதகமாக்கிக் கொள்ள முடியும்.



46. நம்பிக்கை என்பது கடவுளால் நமக்கு அளிக்கப்பட்ட மகாசக்தி. நம்பிக்கையை தன்னிடம் உறுதி படுத்திக்கொள்வதின் மூலம் வெற்றியை அடைய முடியும்.

47. எந்த காரியமாக இருந்தாலும் தன்னம்பிக்கையுடன் முயற்சி செய் உலக சக்திகள் அனைத்தும் உனக்கு துணை நிற்கும்.

48. தன்னுள் இருக்கும் சக்தியை அறியாமல் இருப்பவன் மனிதன் அல்ல. தன்னுள் இருக்கும் சக்தியை அறிந்து வாழ்பவன் மனிதன்.

49. நம்பிக்கை என்பது தெய்வம், சாதனை என்பது வெற்றி, தன்னை சூழ்ந்து அறிவது உலகம், தன்னுள் இருக்கும் சக்தி இறைவன் இதுவே வேதாந்தம்.

50. நீ ஒருவனாய் இருந்தாலும் தன்னம்பிக்கை உடையவனாய் இலட்சியத்தோடு இரு அனுகிரகங்களும் உனக்கு துணை நிற்கும்.

51. உயர்ந்த எண்ணங்கள் உனக்கு இருந்தால் உலக சக்திகள் அனைத்தும் உனக்கு துணை நிற்கும்.

52. தன்னம்பிக்கை இல்லாத மனிதனும் நோக்கம் இல்லாத வாழ்வும் மனித பிறவிக்கு பொருந்தாது.

53. தாயின் கருவறை நாம் உருவான கோயில் தாய் சிந்தனையின் செயல் இவ்வுலகின் வாழ்வு மனிதர்கள் எல்லோரும் நமக்கு அனுபவம் அளித்த புனிதர்கள்.

54. நம் ஆத்மாவுக்கு உருவம் கொடுப்பது தாயின் கருவறை. ஆத்மா அழிவதில்லை. பிறப்பின் நோக்கம் அறிந்து இனி பிறவாமை பெருவதே தாய்க்கு செய்யும் நன்றியாகும்.

55. மனைவி என்பவளிடம் தாய்மையின் தூய அன்பு இருக்குமானால் இல்வாழ்க்கை இன்பமாக அமையும்.

56. தாய் தந்தை நம் கரும வினையின் காரணங்கள் அவர்களை வணங்குவதின் மூலம் நம் வாழ்வு உயரும். ஆனால் தன்னை சூழ்ந்து அறிவதின் மூலம் பெற்றோர் பெருமை போற்றப்படும்.

57. மனித வாழ்வின் நெறிகள் என்பது மனிதன் தன்னை சரியாக புரிந்து ஒழுக்க நெறியில் வாழ்வை தொடங்குவது ஆகும்.

58. காமம் உன் வாழ்வின் தொடக்கம். உயிர் உடலில் இருக்கும் ஒவ்வொரு திசுக்களும் அதனால் ஆக்கப்பட்டது ஆதலால் அற நெறியில் காமத்தை தூய்மை படுத்தி மெய்தத்துவ அறிவை அடைவது மனித வாழ்வின் நோக்கம்.



59. காமத்தை மறுத்தோ அல்லது வெறுத்தோ பூரணமாக வாழ முடியாது. காமத்தை ஒழுக்க நெறியில் ஆய்வித்து வாழ்வது மனித தன்மையாகும்.

60. தன் காம இச்சையை தீர்த்து கொள்ளும் எண்ணத்துடன் எந்த பெண்ணையும் காண வேண்டாம் மாறாக பெண்ணை ஆன்மீக நோக்கில் சிந்தனை செய், மனித பிறவியின் நோக்கம் அறிவாய். பெண்ணின் புனித தன்மை தன்னுள் விளக்கப்படும்.

61. காம உணர்வை பற்றி ஒருவன் சிந்திக்காமல் உறவு கொண்டால் அவன் தன் இச்சையை தீர்த்து கொள்வதாகும். இல்லற இன்பத்தை அவனால் அனுபவிக்கலாகாது.

62. பருவ காலத்தில் காம உணர்ச்சியில் சிக்காமல் மனித உருவத்தை ஆய்வித்து உயர்ந்து வாழ்வது இனிது.

63. காம உணர்வுகளை பற்றி சிந்தனை செய். ஆனால் செயலுக்கு எடுத்து கொள்ளாதே. அவ்வாறு நீ சிந்தனை செய்தால் அவையே உமக்கு ஞானமாகும்.

64. நீ பிறந்த உலகில் சிந்தித்து உழைத்து வாழ வேண்டும். மாறாக மோகம், காம உணர்ச்சி, இன்பம், சுகத்தில் மயங்கி அடிமையாக வாழக்கூடாது. இவை மனிதத் தன்மைக்கு அழகு அல்ல.

65. காம உணர்ச்சியினால் இவ்வுலகம் கருகும் எனவே ஒழுக்கத்தின் பாதையில் உன் வாழ்வை நெறிபடுத்திக்கொள்.

66. காமத்தால் எழுந்த உடம்பு உயிர்மெய் தத்துவத்தில் தெளிவு கண்டு சித்தி அடைய வேண்டும்.

67. காதல் சிந்தனை காம உணர்ச்சியின் அடிப்படையில் ஆக்கப்படுவதில்லை. மாறாக உயிர்மெய் கலக்கும் உணர்வின் கூடலால் உருவாக்கப்படுகின்றது.

68. பெண்ணை அறிந்தவன் தன்னை அறிகின்றான் தன்னை அறிந்தவன் பிரபஞ்ச நிலையை தன்னுள் உணர்கின்றான். பெண் ஆண்மையை வெளிப்படுத்தும் ஆதியாக போற்றுகின்றான்.

69. பெண்ணின் மௌனம் ஆய்வுநிலைக்கு உட்பட்டது. ஆராய்ந்து பார்ப்பதின் மூலம் ஆன்மா தெளிவடைகின்றது.

70. காதல் இளமை பருவத்தில் கற்பொழுக்க அஸ்த்திவாரம். நினைவு உந்துதலும் பெண்மை தன்மைக்கு ஏங்குதலும் தன்னை அறிய செய்யும் பட்டறிவு.

71. பெண்ணின் புறத்தோற்றமும், செயல்களும், வெளிமன ஆற்றலும் நம்புவதற்கில்லை. அவள் உள்மன ஆற்றலை நம் உள்மன ஆற்றலைக் கொண்டு அறிந்துக் கொள்ளவேண்டும்.



72. ஒருவன் பெண்ணிடம் இருந்து பிறந்த மூலத்தை ஆய்வு செய்வதின் மூலம் ஞானத்தின் தத்துவத்தை அறிகின்றான்.

73. பெண் என்பவள் புனிதமானவள். அவள் உணர்வை உணர்கின்றவன் தன்னை அறிகின்றான்.

74. மோகத்தால் பெண்ணை கண்டு மனதில் நினைந்து பெண்ணை உணர்ந்து பகுத்தறிவை பகுத்து பார்க்கும் பக்குவத்தால் தன்நிலை ஆய்வித்து இன்புறுவதே காதல்.

75. பெண்ணிடம் ஒரு ஆண் மயங்கலாகாது ஆனால் பெண்மையைப் பற்றிய ஆய்வில் ஈடுபடலாம். பெண்மையை அறிந்தவன் அனைத்து நிலைக்கும் தகுதி உடையவன்.

76. பெண்ணால் உனக்கு நிம்மதி வேண்டும் என்றால் நீ பெண்ணை தெய்வமாக வணங்கு. வேரு எந்த நிலையிலும் பெண்ணிடம் நிலையான நிம்மதி கிடைக்காது.

77. துன்பத்தை படிகற்களாக அமைத்துக் கொண்டு இன்பத்தின் உச்சியை அடையுங்கள்.

78. உன்னை வருத்துவதற்காக துன்ப நிகழ்ச்சிகள் வாழ்வில் தொடர்ந்து வருவதில்லை. தன்னை அறிந்து கொள்வதற்காகவே வருகின்றன.

79. ஆசை துன்பத்திற்கு காரணமானாலும் உலக அனுபவங்களை பெறுவதற்கு ஆசை காரணமாக அமைகின்றது.

80. பிறர் வாய் பேச்சில் ஏற்படும் இன்ப துன்ப நிகழ்வுகளை பகுத்தறிவின் மூலம் பகிர்ந்து பார்த்தால் நம் வாழ்க்கைக்கு நல்ல பாதை கிடைக்கும்.

81. தன்னைத்தான் எவனொருவன் உணர்கின்றானோ அவன் அடுத்தவரால் துன்பம் வருவதை எண்ணி கவலைகொள்ள மாட்டான்.

82. மனிதனுக்கு சோதனைகள் துன்பத்தை தருவதற்காக வருவதில்லை. உலக வாழ்வை இன்னது என்று மனிதன் அறிந்து வாழ்வதற்கே வருகின்றது.

83. செய்த தவறை உணர்கின்ற பொது தத்துவத்தை ஆக்குபவனும் உண்டு தத்துவத்தை உணர்பவனும் உண்டு.

84. நீ மகிழ்ச்சியாக இருக்க பிறருக்கு துன்பத்தை கொடுக்காதே. ஆனால் பிறர் மகிழ்ச்சியாக இருக்க நீ பிறர் துன்பத்தை ஏற்றுக்கொள் அது உமக்கு துன்பம் இல்லை சிந்தனையை தூண்டும் உணர்வுகள்.



85. துன்பத்தின் ஆழ்நிலை, சிந்தனையின் ஆற்றல், மனிதன் பக்குவம் இவற்றை பொருத்து தத்துவங்கள் ஆக்கப்படுகின்றன.

86. துன்பத்தோடும் பகைமையோடும் நீ போராட கற்றுக்கொள். வெற்றி உமக்கு விவேகமாக அமையும்.

87. உன்னால் எது இயலுமோ அவற்றை ஒரே சிந்தனையுடன் வழிநடத்தி செல். உன் வாழ்வின் பாதை தெளிவாகும்.

88. வாழ்வின் துன்பத்தை அறியாதவன் தத்துவத்தை ஆக்குவதில்லை. தத்துவத்தை ஆக்குகின்றவன் துன்பத்தை நேசிக்கின்றவன் ஆவான்.

89. நாம் நம்மை அறிவதற்கு இதுவரையில் என்ன முயற்சி செய்து இருக்கின்றோம் என்று நொடிக்கு நொடி சிந்தித்துப் பாருங்கள். அதுவே உன்னை அறிந்து உணர்வதற்கு சிறந்த வழியாகும்.

90. நிலையில்லாத மனிதனிடம் நீ எதையும் விரும்ப வேண்டாம். நிலையான உன்னிடத்தில் அடங்கி கிடக்கும் சக்தியை வெளியில் கொண்டுவர முயற்சி செய்.

91. உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் கர்ம வினையே தீர்ப்பாக அமைகின்றது. முன்நெறி விதியாக இருந்தாலும் தவத்தின் பயனால் வெல்ல முடியும்.

92. மனிதன் ஆழ்நிலை சிந்தனையில் உருவாகும் தத்துவங்கள் வாழ்க்கை அனுபவங்களால் விளக்கப்படும்.

93. தன் சுயநலத்திற்காகவும், போற்றுதலுக்கும் புகழ்ச்சிக்கும் அடிமையாகும் மனிதன் கொடிய விஷக்கிருமியாக மாறிவிடுகின்றான்.

94. இயல்பான ஆசையினால் மனிதன் சிந்திக்கின்றான். பேராசையின் விளைவாக மனிதன் துன்பப்படுகின்றான். ஆசை இல்லாதவன் மனிதன் இல்லை. ஒன்றின்மேல் கொள்ளும் நல்ல ஆசையே மனிதனுக்கு வெற்றியை தருகின்றது.

95. மனிதனின் புறமனமே உலகம் ஒரு நாடகமேடை என்று சிந்திக்க வைக்கின்றது.

96. அன்பின் கண்டிப்பு ஒரு மனிதனை நல்ல மனிதனாக்கும். அதிகாரமுள்ள கண்டிப்பு ஒரு மனிதனை குரோதத்தில் ஆழ்த்தி விடும். இரண்டுமே பாசத்தின் நோக்கம்.

97. வாழ்க்கை என்பது பிரச்சினைக்குறியது அல்ல. பிரச்சினையின் காரணம் ஒவ்வொரு மனிதனின் சுயநலம் என்பதை அவனே உணர்கின்றான். சுயநலத்துடன் வாழுங்கள். ஆனால் உங்கள் சுயநலம் பிறருக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் இருக்கட்டும்.



98. உன் மனதில் எழுகின்ற உண்மையை சொல்ல ஒரு போதும் தயங்க வேண்டாம். அந்த உண்மையைச் சொல்வதின் மூலம் அனுபவம் அதிகமாகும். நீ நேர்மையாக வாழ இதுவே வழி.

99. உயர்ந்த எண்ணத்துடன் வாழுங்கள். ஆனால் உங்களில் யார் உயர்ந்தவன் என்ற எண்ணம் வேண்டாம்.

100. பணம் மனித வாழ்வுக்கு தேவை ஆனால் அது ஆன்மாவை ஆள தொடங்க விட்டுவிட கூடாது.

101. தீண்டதகாதவராக இவ்வுலகில் யாரும் இல்லை. 'நான்' என்று அகங்காரம் கொண்ட சில பெரிய மனிதர்கள் மட்டுமே அப்படி எண்ணுகின்றனர்.

102. மற்றவர்களுக்கு நீ வலைந்து கொடுக்கின்ற போது அவர்கள் உன்னை தாழ்வாக நினைக்கலாம். அதற்காக நீ கவலைபட வேண்டாம். நீ வலைந்து கொடுப்பதால் மனித வாழ்வின் உண்மையை உணர்கின்றாய்.

103. உனது தூய எண்ணத்தின் முன் கீழ்தரமான எண்ணம் மடிந்து போகும் இது உனது மனத்தூய்மையின் ஆன்ம வெற்றி ஆகும்.

104. மனிதர்களால் ஏற்படும் இன்னலை சகித்துக்கொள். ஏற்பட்ட இன்னலே உமக்கு இனிதாகும்.

105. ஒவ்வொரு மனிதனும் தன் சுயநலத்திற்காக ஒவ்வொருவரையும் அடிமைப்படுத்திக் கொள்ள நினைக்கின்றனர். இதனால் விளைவது பகைமை ஒன்று தான். ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமானவன் என்று உணர்ந்து, அவனே செயல்பட தொடங்க வேண்டும்.

106. ஒரு மனிதன் தன் உயர்வுக்கு இந்த சமூகத்தை பயன்படுத்தி கொள்கின்றான்.

107. பிறர் பழிகளை சுமக்கின்றபொழுது ஒருவன் அனுபவம் நிறைந்த உயர்ந்த மனிதன் ஆகின்றான்.

108. உயர்ந்த நெறிகளை போதித்தவர்கள் மனிதனாக வாழ்ந்தவர்கள்.

109. மனிதன் இதயம் நோகும்போது அவன் பல தத்துவங்களை உருவாக்குகின்றான். உலகியல் மனிதவாழ்வின் ரகசியத்தை புரிந்து கொள்கின்றான். இதனால் ஞானியாக மாறிவிடுகின்றான்.

110. உலகம் நாடக மேடை அல்ல. உனது ஆழ்மன சக்தியின் இயக்கம்.

111. ஒரு மனிதனின் உள்ளிருக்கும் எண்ணத்தை உன்னுடைய ஞான ஆற்றலால் அறிய முடியும். இதுவே உமக்குள் அடங்கியிருக்கும் சக்தியாகும்.



112. உணர்ச்சி, ஒழுக்க நிலைக்கு செல்லுமானால் வாழ்வின் தொடக்க நிலையை அறிய முடியும்.

113. ஒன்றைவிட ஒன்று சிறந்ததாக உள்ளதால் உன்னை உயர்ந்தவன் என்று யாரிடமும் காட்டிக் கொள்ளாதே. மாறாக அறியாத ஒன்றை அறிந்துக் கொள்ள முயற்சி செய்.

114. உமக்கு தீமை செய்பவர்களைப்பற்றி அதிகம் சிந்திக்க வேண்டாம். அவர்கள் தீய எண்ணம் நம் எண்ணத்தை தாக்கும். ஆகவே நல்ல உணர்வுடன் எப்பொழுதும் ஒருமுகமாய் இருப்பது நன்று.

115. உறவினர்கள், மற்றவர்கள் யார் என்பதை அறிந்து உணர்ந்து ஆராய்ந்து பார். அவர்கள் யாரும் இல்லை தன்னைத்தான் என்பதை மெய் அறிவின் மூலம் உணர்வாய்.

116. உன்னை முழுமையாக ஆராய்ந்து கொண்டபோது வாழ்நாள் முடிந்துவிடும். அந்த முடிவில் உனது உயிர் மரணத்தை வென்று அறிவு வாழ்ந்துவிடும்.

117. உன் உணர்வுகளை உமக்குள் சிந்தனை செய். அந்த உணர்வு உருவாக்கப்பட்ட காரணத்தை ஆய்வுசெய். உனது வாழ்வின் பாதை தெளிவாக்கப்பட்டு விடும்.

118. உனது சுயநல புகழ்ச்சிக்காக திருக்கோயில்களில் உள்ள தெய்வங்களை பழிக்க வேண்டாம். அது மனித வாழ்வின் தன்மை அறிந்து உணரும் தத்துவ கலையாகும்.

119. புகழ்ச்சியில் நீ அதிகம் பற்று வைத்தால், அது உன்னை தீயவனாக மாற்றி விடும். புகழ்ச்சியின் பேராசை கொடிய விஷம் போன்றது.

120. புகழ்ச்சிக்கு புதியவர்கள் தன்னிலை மறந்து நண்பரையும் பகைத்துக் கொள்கின்றனர். அவர்கள் சுயநலக்காரர்கள் மட்டும் அல்ல மனிதப் பண்பை அறியாத மூடர்கள்.

121. நேர்மையாக வாழ்கின்றவன் புகழுக்கு ஆசைப்படுவதில்லை. புகழுக்கு ஆசைப்படுகின்றவன் நேர்மையாக வாழ்வதில்லை.

122. நீ பேரும் புகழும் வாங்க அடுத்தவரை தாழ்த்துவது கீழ்த்தரமான காரியம். பிறரை உயர்த்தி உயர்வதற்கு கற்றுக்கொள்ளுங்கள்.

123. உனது காரியத்திற்காக அடுத்தவரை எதிர்பார்க்காதே நீ எதிர்பார்ப்பதன் மூலம் காலம் வீணாக்கப்படுகின்றன. அந்த காரியத்தை நீயே செய். காரியம் காலத்தோடு முடியும். அனுபவம் நிறைந்த வெற்றியும் கிட்டும்.



124. நல்லவனாக வாழ்வதற்கு எப்பொழுது நீ கற்றுக் கொண்டாயோ, அப்பொழுதே நீ தூயவனாக ஆகிவிடுகின்றாய்.

125. உனது மனதில் உதிக்கும் எண்ணங்கள் போல் உன்வாழ்வில் நடக்க கற்றுக்கொள் இவை இறைவனின் விருப்பம் ஆகும்.

126. உனது மௌனம் அமைதியின் வழி என்றாலும் பிறரை சிந்திக்க வைக்கின்றது. வாய்மை வெல்ல சிறந்த வழியாகும்.

127. அன்புடன் பழகுவதும், பண்புடன் வாழ்வதும், அற ஒழுக்க கருத்துக்களை சொல்வதும் உனது போதனைகளாக இருக்கட்டும். மாறாக மனிதரை பிரிப்பதாக போதனைகள் இருக்க வேண்டாம்.

128. அன்புடையவர் யாவரும் உறவினர்கள். பண்புடையவர் யாவரும் நல்ல நண்பர்கள். ஒழுக்கநெறி உடையவர் யாவரும் தவ குருக்கள். தன்னை சூழ்ந்து அறிந்தவர் யாவரும் தவசிகள். இதுவே மனித நேயத்தின் மாண்பு.

129. அன்பு, பாசம், பண்பு உன்னிடம் இருக்குமானால் நீ இந்த உலகில் எதையும் வென்று விடலாம்.

130. ஒருவன் உயர்ந்த படிப்பு படித்திருந்தாலும் பகுத்தறிவை பயன்படுத்தாவிட்டால் அவன் பைத்தியகாரன்.

131. இரத்த பாசத்தால் ஏற்படும் உறவைவிட ஆழ்மன உணர்வால் ஏற்படும் உறவிற்கு சக்தி அதிகம்.

132. நீ நல்ல எண்ணங்களை விரும்பு, அதையே வாழ்க்கையாக்கிக் கொள். ஆரம்பம் கொஞ்சம் கடினம், ஆனால் முடிவு அழியாத இன்பம்.

133. சுயநலம் அற்ற சேவையும் நல்லுணர்வுடன் செய்த உதவியும் இந்த உலகில் நீங்கள் விட்டுச் சென்ற முத்திரையாக இருக்கட்டும்.

134. நற்குணங்களுடன் இரு. நடப்பவை எல்லாம் நல்லவையாக இருக்கும்.

135. பிறர் மனம் நோகுமளவு பேசிவிட்டு தன்னை ஆன்மீகவாதி என்று உரைப்பவன் இயம நிலை அறியாத மூடன்.

136. அடுத்தவர் உன்னை வெறுக்கும் போது அவர்களிடம் இருந்து நீ விலகிவிடு. அவர்கள் உன்னை வெறுப்பது அவர்கள் முன்னேற்றத்திற்காக கூட இருக்கலாம். இதனால் நீ அவர்களுக்கு நன்மை செய்கின்றாய்.

137. வண்ணங்களை கண்டு எண்ணங்கள் மாறுகின்றது ஆனால் வண்ணம் மாறுவது இல்லை.



138. உண்மைக்கு விளக்கம் அமைதி. பொய்க்கு விளக்கம் வாதம். மௌனத்தின் விளக்கம் வாழ்வியல் திறவு.

139. எல்லாம் நான் என்று வாழ்பவர்கள் இந்த சமுதாயத்திலும் ஓர் இயக்கத்திலும் குழப்பங்களை உருவாக்குகின்றனர்.

140. பணத்தின் அன்பு வானத்தில் மிதக்கும் மேகத்தை போன்றதாகும் காற்று அடித்தால் திசைமாறக் கூடும்.

141. நீ பிறந்த உலகிற்கு உதவிட விளம்பரத்தை தேட வேண்டாம்.

142. உன் வாழ்வில் நடந்தவையை அனுபவமாகக்கொள். உலகம் உமக்கு எளிதில் புரிந்துவிடும்.

143. உன் நண்பனிடம் இருந்து நீ எதிர்பார்ப்பது நல்ல அறிவுரையாக இருக்க வேண்டும். அதுவே நட்பின் இலக்கணம்.

144. உன் கடமைகளை நீயே செய். அவை உனது வாழ்க்கைக் கல்வி ஆகும்.

145. எதையும் சாதிக்க முடியும் என்பது வாழ்வு. முடியாது என்பது மரணம்.

146. நேர்மையாக வாழ்வது கடினம் அப்படி நீ வாழ்ந்துவிட்டால் உன் வாழ்க்கைக்கு மரணமில்லை.

147. உனது கட்டுபாட்டில் வாழ்வதற்கு கற்றுக்கொள் பின் உலக இயக்கம் உன் கட்டுபாட்டில் இயங்கும்.

148. நீ பிற மனிதர்களின் பேச்சைக்கேட்டு நடப்பாயாயின் உன் எண்ணத்திற்கு நீ விளங்கிட்டுக் கொள்கின்றாய்.

149. நீ யார் என்பது நீ பிறந்த உலகிற்கு தெரிய வேண்டும். உன் எண்ணம், உள்ளம், அறிவு, ஆன்மாவின் தூய்மை என்னவென்று இவ்வுலகம் உணர்ந்து கொள்ளட்டும். இதுவே மனித பிறப்பின் நோக்கம்.

150. மனித தத்துவம் என்பது அவன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிமுறைகளாகும்.

151. ஒரு மனிதன் ஒரு மனிதனை முழுவதும் புரிந்துகொள்ள முடிவதில்லை. காரணம் நான், நீ, அவன் என்னும் சாயலாக வாழ்கின்றான்.

152. கௌரவத்தின் படிகளைவிட்டு கீழே இறங்கு, உயர்வின் படிகள் உன்னை உயர்த்திவிடும்.



138. உண்மைக்கு விளக்கம் அமைதி. பொய்க்கு விளக்கம் வாதம். மௌனத்தின் விளக்கம் வாழ்வியல் திறவு.

139. எல்லாம் நான் என்று வாழ்பவர்கள் இந்த சமுதாயத்திலும் ஓர் இயக்கத்திலும் குழப்பங்களை உருவாக்குகின்றனர்.

140. பணத்தின் அன்பு வானத்தில் மிதக்கும் மேகத்தை போன்றதாகும் காற்று அடித்தால் திசைமாறக் கூடும்.

141. நீ பிறந்த உலகிற்கு உதவிட விளம்பரத்தை தேட வேண்டாம்.

142. உன் வாழ்வில் நடந்தவையை அனுபவமாகக்கொள். உலகம் உமக்கு எளிதில் புரிந்துவிடும்.

143. உன் நண்பனிடம் இருந்து நீ எதிர்பார்ப்பது நல்ல அறிவுரையாக இருக்க வேண்டும். அதுவே நட்பின் இலக்கணம்.

144. உன் கடமைகளை நீயே செய். அவை உனது வாழ்க்கைக் கல்வி ஆகும்.

145. எதையும் சாதிக்க முடியும் என்பது வாழ்வு. முடியாது என்பது மரணம்.

146. நேர்மையாக வாழ்வது கடினம் அப்படி நீ வாழ்ந்துவிட்டால் உன் வாழ்க்கைக்கு மரணமில்லை.

147. உனது கட்டுபாட்டில் வாழ்வதற்கு கற்றுக்கொள் பின் உலக இயக்கம் உன் கட்டுபாட்டில் இயங்கும்.

148. நீ பிற மனிதர்களின் பேச்சைக்கேட்டு நடப்பாயாயின் உன் எண்ணத்திற்கு நீ விளங்கிட்டுக் கொள்கின்றாய்.

149. நீ யார் என்பது நீ பிறந்த உலகிற்கு தெரிய வேண்டும். உன் எண்ணம், உள்ளம், அறிவு, ஆன்மாவின் தூய்மை என்னவென்று இவ்வுலகம் உணர்ந்து கொள்ளட்டும். இதுவே மனித பிறப்பின் நோக்கம்.

150. மனித தத்துவம் என்பது அவன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிமுறைகளாகும்.

151. ஒரு மனிதன் ஒரு மனிதனை முழுவதும் புரிந்துகொள்ள முடிவதில்லை. காரணம் நான், நீ, அவன் என்னும் சாயலாக வாழ்கின்றான்.

152. கௌரவத்தின் படிகளைவிட்டு கீழே இறங்கு, உயர்வின் படிகள் உன்னை உயர்த்திவிடும்.



153. உனது எண்ணத்தைவிட இவ்வுலகம் குறுகிய பரப்பளவை உடையது.

154. தன்னை தான் உயர்த்திக்கொள்ள இந்த சமூகத்தை பயன்படுத்திக் கொள்ளும் சமூக தொண்டர்கள்.

155. உலக ஆசைகள் எல்லாம் தன்னுள் ஆராய்ந்து மாயயை கடந்த நிலையே நிர்வாணம் ஆகும்.

156. தன்னுள் ஆழ்ந்த சிந்தனையே பகுத்தறிவை செம்மை படுத்துகின்றது.

157. மற்றவர்க்கு உதவி செய்வதை பெருமையாக எண்ண வேண்டாம். அந்த உதவி செய்வதற்கு வாய்ப்பு கொடுத்த மனிதரை பெருமையாக எண்ணி மகிழ்ச்சி அடையுங்கள்.

158. உண்மையை பேசும் பொழுது ஒருவன் அதிகம் சிந்திக்கின்றான். பொய்யை பேசும்போது ஒருவன் அதிகம் பயப்படுகின்றான். மௌனமாய் இருப்பவன் தன் உணர்வுகளை மறைத்து கொள்கின்றான். ஆனால் அறிவை விரித்துக் கொள்கின்றான்.

159. ஓர் உயிரின் உணர்வை ஊக்குவிக்க ஒரு உயிரின் உணர்வு தேவை. இயற்கையின் இயல்பும் இதுவே.

160. தன்னுள் ஆழ்வதற்கும் தன்னுள் ஒடுங்குவதற்கும் நாசி காரணமாக அமைகின்றது. புலனடக்கமும் அறிவின் தெளிவும் நாசியின் தன்மையை சிவமயம் ஆக்குகின்றது.

161. புணரும் அற ஒழுக்க உணர்வே மனித நல்லுயிர் வாழ்வில் தொடரும் பிரம்ம தத்துவம்.

அஃக்கி சித்தர் யோகம் மெய்த்தத்துவ ஆய்வு அறக்கட்டளை

21, குண்டு சாலை, உழவர்கரை, புதுவை–10.